1971 ஜூலை 23]

8. மதுரை நகராட்சி, மாநகராட்சியாக்கப்பட்டிருப்பதால், சென்னை மாநகராட்சிக்குப் பொருந்தும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மதுரை மாநகராட்சிக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

9. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும்.

10. குடிசைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

11. புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யவேண்டும் என்று 11 கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்கள். இவை அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன.

கோரைக்கு விற்பனை வரி விலக்கு

* 403. வினு.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப் பட்டதன் மூலம் அரசு இழக்கும் தொகை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ. 30,000 அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, ஏழைகளுக்கு நன்மை செய்யும் இது போன்ற வேறு வரி விலக்குகள் என்ன பொருள்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? இன்னும் ஏதாவது கைவினைப் பொருள் களுக்கு வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் உண்டா? கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் ரிபேட் போல், இந்தக் கோரைப் பாய்களுக்கும் ரிபேட் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்தெந்தப் பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து இருக்கிறோம் என்று கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். ரிபேட் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இதைத் தொழிலமைச்சரிடம் கேட்கவேண்டும்.

அரிசனங்களுக்கு கிராம அதிகாரிகள் பதவி

* 404. வினு.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் கர்ணம், கிராம முன்சீப் முதலிய வேலை களுக்கு அரிசன மக்களுக்கு விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்கப் படுகிறதா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) தற்பொழுது உள்ள விகித முறையில் சலுகை காட்ட வாய்ப்பு இருப்பதால் விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசிய மில்லை.

திரு. எம். முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, விகிதா சாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசியமில்லை என்று சொல்கிறார்கள். இனிமேலாகிலும், அந்தக் கிராமங்களில் உள்ள கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு ஹரிஜன் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு, அதற்கு வேண்டிய சொத்து மதிப்பு வைத்து இருந்தால், படிப்பு தகுதி இருந்தால், அவர்கள் மனுக் கொடுத்தால் அவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு கிராம உத்தியோகஸ்தராக நியமிக்க சட்ட விதிமுறைகள் வகுத்து இருக்கிறோம். அதற்கு ஏற்ப பொதுவாக கிராமங்களிலிருந்து மனுக்கள் கேட்கிறோம். அந்த மனுக்கள் கேட்கிற நேரத்தில் அவர்களும் மனுக் கொடுத்தால் பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. அதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஜாதி விகிதா சாரப் பிரகாரம் இந்தக் கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு ஆட்கள் எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஜாதி விகிதாசாரத்தைப் பார்ப்பது இல்லை. இந்தப் பதவிகளுக்கு என்று தனியாக தகுதி, விதி முறைகள் வைத்து இருக்கிறோம். 40 வயதுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். 11-வது வகுப்புத் தேறி இருக்க வேண்டும். ரெவினியூ டெஸ்ட் பாஸ் செய்து இருக்க வேண்டும். இப்படி விதிமுறைகள் வைத்து இருக்கிறோம். இதைத் தவிர, எவ்வளவு சொத்து இருக்க வேண்டும் என்று, அதாவது ஒரு கிராமத்தில் எவ்வளவு வரி வசூல் ஆகிறதோ அந்த அளவுக்கு சொத்து இருக்க வேண்டும். இவைகளைப் பொறுத்துத்தான் நியமிக்கிறோம். ஜாதி விகிதா சாரத்தைப் பார்ப்பது இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, புதிய விதிமுறைகளின் கீழ் கிராமக் கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து இருக்க வேண்டுமென்று இருப்பதையாவது, தாழ்த்தப்பட்ட வர்களைப் பொறுத்தவரையில் தளர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒருவருக்கு ஒரு விதி, இன்னொருவருக்கு ஒரு விதி என்று செய்வதற்கு இயலாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எக்சம்ஷன் தரும்போது, இதற்குக் கொடுக்காத காரணம் என்ன? தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத ஒரு ஜாதியில் பிறந்தவர்கள் தான் அந்தப் பதவிக்கு வரவேண்டு மென்பது அரசாங்கத்தின் கொள்கையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு ஜாதி தான் வர வேண்டுமென்று அரசாங்கம் கொள்கை வகுக்கவில்லை. ஒரு கிராமத்தில் வரி வசூல் செய்வதற்குத்தான் கர்ணம்,

1971 சூலை 23]

முன்சீப்புகள் நியமிக்கப்படுகிறார்கள். இதிலே ஜாதிப் பிரச்னை வர வில்லை. புதிதாகக் கொண்டு வந்து புகுத்துவதில் பயன் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

டாக்டர் வ. சின்னசாமி: தலைவரவர்களே, கிராம முன்சீப்பு போன்ற வேலைகளுக்கு நியமிக்கப்படுவதற்கு சொத்து இவ்வளவு இருக்க வேண்டுமென்று விதி முறை வகுத்து இருக்கிறார்கள், ஹரிஜனங்களுக்கு அந்த விதியைத் தளர்த்த முடியுமா, அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சொத்து மதிப்பு கேட்பது அரசாங்க வரிப் பண வசூலுக்கான பாதுகாப்பு. அதைத் தளர்த்த இயலாது.

திரு. ஆ. முனியாண்டி: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் ஆதித் திராவிட பெருமக்கள் கர்ணம் போன்ற பதவிகளில் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தெரியாது. அங்கத்தினர் சொன்னால் தெரிந்து கொள்ளலாம்.

திரு. வீ. இராசகோபால்: தலைவரவர்களே, ஹரிஜனங்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்து கர்ணம் போன்ற உத்தியோகங்களைக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவ்வப்போது அதற்கான பரீட்சைகள் வைக்கப்படுகின்றன. அவற்றில் தேற வேண்டும். அப்படித் தேறியவர்கள் மனுச் செய்தால், அவர்கள் தகுதி, சொத்து மதிப்பு ஆகியவற்றைப் பார்த்துப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, ஒரு கிராமத்தில் கர்ணம் கிராம முன்சீப்பு உத்தியோகத்திற்கு அங்கே உள்ள தகுதி உள்ளவர்கள் மனு செய்வார்களானால், மற்ற சமூகத்தினரைப் போல், ஹரிஜன மக்களும் சொத்து மதிப்பிலும், மற்ற தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்களையும் புறக்கணிக்காமல் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி கீழ் மட்டத்தில் ஏதாவது புறக்கணிக்கப்பட்டிருந்தால், அப்பீல் செய்வதற்கு எல்லா வாய்ப்பு வசதியும் இருக்கிறது. அது அரசாங்கத்திடம் அப்பீலில் வரும்போது பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதுவரையிலும் வில்லேஜ் ஆபீசர்களாகப் போடுவதற்கு ஒரு தகுதி வாய்ந்த ஹரிஜன் கூடக் கிடைக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தமிழ்நாட்டில் ஹரிஜன் அல்லாதவர்கள் தான் வில்லேஜ் ஆபீசர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னதே இல்லை.